**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.132/2025**

**Deposition of Witness for Prosecution PW 15**

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr. நிவேதா | Father's Name | : இளங்கோவன் |
| Village | : மன்னார்குடி | Taluk | : மன்னார்குடி |
| Calling | : மருத்துவர் | Age | : 34 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை பிரிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.06.2024 அன்று பணியிலிருந்தபோது வலங்கைமான் காவல் நிலைய கு.எண்.306/2024 வழக்கில் சம்மந்தப்பட்ட கார்த்தி வயது 33 என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வலங்கைமான் காவல் ஆய்வாளர் அவர்கள் காவலர் 580 திரு.அருள்தாஸ் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்தை கொடுத்தார். அதனை பெற்றுக்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.02 14:55:21 +0530

கொண்டு நான் பிரேத பரிசோதனையை பிற்பகல் 1.30 மணிக்கு செய்தேன். நல்ல உடல் வாகு கொண்ட ஆணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1)4x5x2 செ.மீ அளவிலான கிழிந்த காயம் வலது புற முன் தலையில் காணப்பட்டது. 2)6x5x4 cm அளவிலான கிழிந்த காயம் தலையின் நடுகோட்டின் முன்பகுதியில் காணப்பட்டது. அதற்கு அடியில் கோடு போன்ற எலும்பு முறிவு மண்டையோட்டில் காணப்பட்டது. 3) 9x5x3 cm அளவிலான கிழிந்த காயம் இடது பக்க பின் தலையில் காணப்பட்டது அதன் பகுதி நீண்டு நடுபகுதியிலும், வலது பகுதியிலும் காணப்பட்டது. 4) 7x6x3 cm அளவிலான கிழிந்த காயம் இடது பக்க பின் தலையில் காணப்பட்டது. 5) 2x1x0.5 cm அளவிலான கிழிந்த காயம் வலது கண்ணுக்கு மேல் காணப்பட்டது. 6) 1x1 cm அளவிலான சிராய்ப்பு காயம் வலது கையின் முன் பகுதியில் காணப்பட்டது. 7) 2x1 cm அளவிலான சிராய்ப்பு காயம் இடது கால் முட்டியில் காணப்பட்டது. கண், மூக்கு, வாய், உதடு, நாக்கு, பற்கள், காது, நெஞ்சுபகுதி மற்றும் வயிறு பகுதிகளில் எந்தவித மாற்றமும் இல்லாமல் சீராக இருந்தது. உட்புற தோற்றம் நாவடி எலும்பு சீராக இருந்தது. இரண்டு பகுதி நெஞ்சு எலும்புகளும் சீராக இருந்தன. இரு நுரையீரல்கள், இருதயம் ஆகியவை

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.02 14:55:32 +0530

சீராக இருந்தன. இதயத்தின் உட்புற தோற்றத்தில் உள் உறையில் ரத்தம் இல்லை. கல்லீரல், மண்ணீரல் சீராக இருந்தன. இரைப்பையில் 200 மில்லி அளவிலான திரவம் ஆல்கஹால் வாசனையுடன் காணப்பட்டது. சிறுகுடல் மற்றும் பெருங்குடல் சீராக இருந்தன. உட்புறத்தில் உணவு எதுவுமில்லை. இரு சிறுநீரகங்களும் சுருங்கி காணப்பட்டன. தலைப்குதியை கூராய்வு செய்து பார்த்ததில் மூளை முழுவதும் ரத்தமும், இரத்த கட்டிகளும் காணப்பட்டன. மூளையில் கன்றிய காயங்கள் காணப்பட்டன. ரத்தம் உறைந்த துணியை ரத்த வகை பகுப்பாய்விற்காக தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. உள்ளுறுப்புகளை சேகரித்து ரசாயன பகுப்பாய்விற்காக தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் அவர் ஆல்காஹல் உட்கொண்டிருந்தார் என்று கண்டறியப்பட்டது. அந்த Toxicology அறிக்கை **அ.சா.ஆ.6**. அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.7**. மேற்கூரிய நபர் தலையில் ஏற்பட்ட பலதரப்பட்ட காயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்தக் கசிவால் இறந்துள்ளார் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ.8**. இரும்பு பைப்பால் ஒரு நபர் தாக்கப்பட்டால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.02 14:55:46 +0530

விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இறந்தவரின் Stomach, Intestine, Liver, Kidney ஆகிய உடல் உள்ளுறுப்புகளில் எத்தில் ஆல்கஹால் இருந்துள்ளது என்றால் சரி. மது அருந்திய நபர் நிலை தடுமாறி கீழே விழுந்து தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் இறந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் இல்லை. மழுங்கிய விசை கொண்ட ஆயுதத்ததால் தாக்கினால்தான் மேற்சொன்ன காயங்கள் ஏற்படும்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.02 14:55:52 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.132/2025**

**Deposition of Witness for Prosecution PW 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கவிபாலன் | Father's Name | : | அருமைராஜ் |
| Village | : | நார்த்தாங்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | | Age | : | 28 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 02nd day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போதும் நார்த்தாங்குடி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.06.2024 அன்று நான் என்னுடைய அலுவலகத்தில் இருந்தபோது சீனிவாசன் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். நான் உடனே வலங்கைமான் காவல் ஆய்வாளருக்கு தகவல் சொன்னேன். காவல் ஆய்வாளர் சீனிவாசனை கைது செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் என் அலுவலகத்திற்கு வந்த சரவணன் 2 வது சாட்சியாகவும்

SELVA MUTHU KUMARI — Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.02 14:56:01 +0530

கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.9**. வெண்ணாற்று கரையில் இரும்பு பைப்பை மறைத்து வைத்திருப்பதாக ஆய்வாளரிடம் சொன்னார். ஆய்வாளர் அவரை அழைத்து சென்று இரும்பு பைப்பை கைப்பற்றினார். இரும்பு பைப்பை ஆய்வாளர் கைப்பற்றியதை நான் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது, 2 வது சாட்சி கையெழுத்து சரவணனுடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.10**.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 26.06.2024 ம் தேதி காலை நார்த்தாங்குடி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தபோது பகல் 12.00 மணியளவில் என்னை சந்திக்க சரவணன் என்பவர் வந்தார் எனவும் அப்போது நார்த்தாங்குடி மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த சீனிவாசன் என்பவர் 25.06.2024 ம் தேதி அவர் வீட்டில் நடந்த சம்பவம் பற்றி என்னிடம் கூற நான் காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன் எனவும் அங்கு வந்த காவல் ஆய்வாளர் சீனிவாசனை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.02 14:56:15 +0530

எனவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சரவணனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் எனவும் பின் சீனிவாசன் காவல் ஆய்வாளரை தன் வீட்டிற்கு அழைத்து சென்று வீட்டிலிருந்த கார்த்திக்கை அடிக்க பயன்படுத்திய இரும்பு பைப் ஒன்றை ஆய்வாளரிடம் எடுத்து கொடுத்தபோது அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார் எனவும் அப்போது மதியம் 2.30 மணியிருக்கும் எனவும் அந்த மகஜரில் நானும் சரவணனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் எனவும் சொன்னால் தவறு. எதிரி தெரிந்தவர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.02 14:56:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.